**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.**

**RLTO.No.1/2025**

| | | | |
|---|---|---|---|
| வாக்குமூலம் - | ம.**சா.1** | தொடங்கும் நேரம் : | 04.14 p.m. |
| | | முடிவுறும் நேரம் : | 04.24 p.m. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **நித்தியானந்தன்** | மதம் | : | -- |
| த/பெ. | : | **ரங்கநாதன்** | தொழில் | : | **வியாபாரம்** |
| கிராமம் | : | **வந்தவாசி** | வயது | : | **72** |
| தாலுக்கா | : | **வந்தவாசி** | நாள் | : | **26-09-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **26**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்காக சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **03.09.1998** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **ம.த.சா.ஆ.1.** |
| **02.** | **--** | **மனுதாரர் பெயரில் உள்ள பட்டா. - கணிணி வழி பதிவிறக்க நகல்.** | **ம.த.சா.ஆ.2.** |
| **03.** | **27.02.2024** | **தேதியிட்டு 2023-2024 வருடத்திற்கான மனு சொத்திற்கு மனுதாரர் செலுத்திய வரி ரசீது - கணிணி வழி பதிவிறக்க நகல்.** | **ம.த.சா.ஆ.3.** |
| **04.** | **05.06.2024** | **தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்.** | **ம.த.சா.ஆ.4.** |
| **05.** | **--** | **எதிர்மனுதாரர் பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை.** | **ம.த.சா.ஆ.5.** |

**06. 27.06.2024** **தேதியிட்ட எதிர்மனுதாரர் மனுதாரரின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு - சார்வு நகல்.** **ம.த.சா.ஆ.6.**

மேற்படி **ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.